# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2019 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019*, நவெம்பர் மாதம் *22* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *16.00***　　**தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2019 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டம்

[2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஒ.- (கூட்டி) 01/2015

## இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

''இலங்கை நிர்மாணத் தொழில் பணிமனை'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான பணிமனையொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதனது குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட பணிமனையுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக, இதுவரை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட பணிமனையானது எப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அப்பணிமனை கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''பணிமனை'' என குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனையின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''இலங்கை நிர்மாணத்தொழில் இலங்கை நிர்மாணத் தொழில் பணிமனையைக் கூட்டிணைத்தல்

பணிமனை'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமையைக்கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டிணைக்கப்பட்ட குழு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) நிர்மாண செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களின் அக்கறைகளை ஊக்குவித்தலுக்கும் பாதுகாத்தலுக்கும் பிரதிநிதித்துவ குழுவொன்றாக செயற்படுதல் ;

(ஆ) தேசிய நிர்மாணத்தொழிலின் அபிவிருத்தியை செயலூக்குவித்தலுக்கு இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் ;

(இ) தேசிய முக்கியத்துவம்வாய்ந்த பிரச்சினைகளை ஆய்வு செய்தலும் விதப்புரைகளை ஆக்குதலும்;

(ஈ) அதன் உறுப்பினர்களுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் காணப்படும் அத்தகைய இடப்பிரதேசங்களில் உயர்தொழிலர்களைக்கொண்ட குழாம்களைத் தாபித்தலும் அத்தகைய கருத்திட்டங்கள் பற்றி மதிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கைகளையும் சான்றிதழ்களையும் வழங்குதல்;

(உ) தேசிய நிர்மாணத் தொழிலிலுள்ள உறுப்பினர் குழுமங்களுக்கான பணியாட்டொகுதியினரை அத்தகைய குழுமங்களின் வேண்டுகோளின்மீது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிலையமொன்றாகச் செயற்படுதல்;

(ஊ) நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவைப் பெற்றுக்கொண்டதன் மேலும், அத்துடன் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில்

அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் மற்றும் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நியமங்கள் மற்றும் வழிகாட்டுநெறிகள் என்பவற்றினதும் ஏற்பாடுகளுக்கமையவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்காக இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் ஒப்பந்தங்களைப் பாதுகாத்தல்;

(எ) உள்நாட்டு நிர்மாணத்தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான புலமைப் பரிசில்களையும் இணைப்பரிசில்களையும் வழங்குதல்;

(ஏ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பயிற்சிக் கற்கை நெறிகளை நடாத்துதலும் சான்றிதழ்களை வழங்குதலும்; அத்துடன்

(ஐ) நிர்மாணத் தொழிலின் மேம்பாட்டுக்காக ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட அல்லது நன்கொடையளிக்கப்பட்ட நிதிகளுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக, பாதுகாவலர்களாக அல்லது முகாமையாளர்களாகத் தொழிற்படுதல்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடு இல்லாதிருப்பதனை கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப்படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமைசெய்தலும் நிருவகித்தலும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள, முகாமைத்துவச் சபையொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற பணிமனையின் முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்கள், 7 ஆம் பிரிவின்கீழான விதிகளின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது முகாமைத்துவச் சபை நியமிக்கப்படும்வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலக் குழுவொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) இடைக்காலக்குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்திற்கான விதிகளை ஆக்குவதற்கும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான அல்லது நியமிப்பதற்கான விதிகளை ஆக்குவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்காலக் குழுவின் ஏதேனும் முடிபு அத்தகைய குழுக் கூட்டத்தில் சமுகமளிக்கும் அதன் பெரும்பான்மை உறுப்பினர்களினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது முகாமைத்துவச் சபை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைஞர்களும் உட்பட முகாமைத்துவச் சபையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீளநியமிக்கப்படுதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவி விலகல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில், முகாமைத்துவச் சபை, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்யவும், புரியவும் மற்றும் நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும் ;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கென அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கென அவசியப்படுகின்றவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவாயினும் சரி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு சார்பில் அதனால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவாயினும் சரி செய்துகொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல் அல்லது நடாத்திச்செல்லுதல்;

(இ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின், முகாமைத்துவச் சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்தினாலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும் ;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைத்துவ சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும் ;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கு அமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் என்பவற்றை ஒழுங்குசெய்தல்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களையொத்த அதே குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியிலும் ஆளணியினரைப் பயிற்றுவித்தல்;

(ஓ) நிர்மாணத் தொழில் தொடர்பில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கருமங்களின் செயற்பாடுகள் தொடர்பில் செய்தித்தாள்கள், வணிக விபரக்கொத்துக்கள், நாளேடுகள், மாதவெளியீடுகள் அல்லது பருவவிதழ்கள் என்பவற்றை நிலைநாட்டுதல், அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் அத்துடன் முகாமைச் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஏதேனும் முறையில் அத்தகைய தகவலை பரப்புதலும்; அத்துடன்

(ஔ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்.

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக் குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) முகாமைத்துவச் சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நிய மனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) முகாமைத்துவச் சபையினது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) முகாமைத்துவச் சபையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**8.** சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். *உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு.*

**9.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். *கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்*

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும், கணக்காய்வும்.

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘தகைமைபெற்ற கணக்காய்வாளர்’’ என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ, அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை.

**11.** (1) முகாமைத்துவச் சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து வீடமைப்பு மற்றும் நிர்மாணம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாக தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

பணிமனையினால் செலுத்தப்பட வேண்டியவையும் பணிமனைக்குச் செலுத்தப்படற் பாலனவையுமான தனிசுகள்.

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் பணிமனையின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று பணிமனைக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

பணிமனையில் உரித்தாக் கப்பட்டுள்ள ஆதனம்.

**13.** எல்லா நோக்கங்களுக்காகவும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்று ஏலவேயுள்ள பணிமனையின் எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்கள் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பு, அத்தகைய ஆதனங்களை பாதிக்கின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நிபந்தனை அல்லது ஏற்பாட்டிற்கமைய இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழு அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**14.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைவாகவும் அவற்றை விற்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனங்களையும் பயன்படுத்துதல்.

**15.** எவ்வாறாயினும், பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாக வல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றுதலோ ஆகாது.

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை முகாமைத்துவச் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும். *கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை.*

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, முகாமைத்துவச் சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

**17.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப் படுதல் வேண்டும். *கலைக்கப்பட்ட தன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக்கூட்ட மொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**18.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது. *குடியரசின் உரிமைகளைப் பேணல்.*

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*